# National College (Autonomous)

Nationally Re-accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence

Tiruchirappalli

# Department of Library and Information Science

## CENTRAL LIBRARY



**Cordially invites you for the**

**Dept. Association Inauguration and Orientation**

## FOR I UG STUDENTS

**15 JULY 2023 | 3.00 Pm 4.00 Pm**

Venue: Library Audio Visual Theatre



| PRINCIPAL | LIBRARIAN | SECRETARY |
|---|---|---|
| Dr.K.Kumar | Dr.T.Sureshkumar | Shri.K.Raghunathan |



Department of
Information Science
Association

தேசியக் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி

நூலகப் புத்தாக்கப் பயிற்சி - 2023

தேசியக் கல்லூரியில் புதிதாக சேர்ந்த இளங்கலை மாணவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை இன்று 15-07-2023. அன்று நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் முதலாம் ஆண்டு இளநிலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இளங்கலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு தேசியக் கல்லூரியின் செயலாளர் திரு கா. ரகுநாதன் அவர்கள் RFID மற்றும் பார்கோடு (Bar-Code) பயன்பாட்டுடன் கூடிய கல்லூரியின் அடையாள அட்டையும் நூலகத்தின் நூல்கள் வழங்கும் அடையாள அட்டையும் வழங்கி சிறப்பித்தார். தேசியக் கல்லூரியின் முதல்வர் முனைவர் கா. குமார் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தி சிறப்பித்தார்.

இக்கல்லூரியின் நூலகர் முனைவர் த.சுரேஷ்குமார் அவர்கள் தேசியக் கல்லூரியின் நூலக விதிமுறைகள் மற்றும் நூல்கள் e-புத்தகங்கள், e- நாளிதழ்கள் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகள் எவ்வாறு தங்கள் அலைபேசி மூலம் மாணவர்கள் தேசிய கல்லூரியில் நூலகத்தில் உள்ள அனைத்து கற்றல் வளங்களையும் பெற முடியும் என்பதை விரிவாக விளக்கினார். வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தேசியக் கல்லூரி நூலகத்தில் உள்ள சேவைகள் அனைத்தும் நவீன கணினிமயமாக்கப்பட்டதையும் அதை எவ்வாறு பெற முடியும் என்பதையும் விரிவாக மாணவர்களுக்கு செய்முறை விளக்கம் சிறப்பாக வழங்கினார்.

இக்கல்லூரி நூலகத்தில் உள்ள கற்றல் வளங்கள் அனைத்தும் தங்கள் அலைபேசி மூலம் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் எவ்வாறு பெற முடியும் என்பதையும் விளக்கமாக நிகழ்ச்சியில் எடுத்துரைக்கப்பட்டது நிறைவாக நூலகத்திற்கு தேவையான அதிநவீன வசதிகளை நிறைவேற்றிக் கொடுத்த கல்லூரியின் செயலர் மற்றும் முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார். மேலும் மாணவர்கள் தங்கள் முழு திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றால் அவர்கள் இக்கல்லூரி நூலகத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தேசிய கல்லூரியின் துணை முதல்வர்கள் முனைவர் பிரசன்ன பாலாஜி, முனைவர் இளவரசு மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய கல்லூரியின் நூலக தட்டச்சு பயிற்றுனர் அன்புமணி அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார். துணை நூலகர் ராதா ஜெயலக்ஷ்மி நன்றியுரை வழங்கினார் நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை கல்லூரி நூலக அலுவலர்கள் லட்சுமணன் கலியமூர்த்தி உமா மகேஸ்வரி மற்றும் ஹரிஹரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர் நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மாணவர்கள் கல்லூரியின் ஆராய்ச்சி மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தினமணி திருச்சி 3

ஞாயிற்றுக்கிழமை, 16 ஜூலை

# கல்லூரி மாணவர்களுக்கு நூலக புத்தாக்கப் பயிற்சி



திருச்சி தேசியக் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற நூலக புத்தாக்கப் பயிற்சி வகுப்பில் மாணவர்களுக்கு விளக்கம் அளித்த முனைவர் த. சுரேஷ்குமார்.

**திருச்சி, ஜூலை 15:** தேசியக் கல்லூரி மாணவர்களுக்கு நூலக புத்தாக்கப் பயிற்சி வகுப்பு சனிக்கிழமை நடைபெற்றது.

இக்கல்லூரியில்புதிதாகசேர்ந்த இளங்கலை மாணவர்களுக்கான பயிற்சி முகாமை தொடக்கி வைத்து, கல்லூரிச் செயலர் கா.ரகுநாதன், மாணவர்களுக்கு பார்கோடு வசதியுடன் கூடிய அடையாள அட்டை, நூலகத்தில் பயன்படுத்தும் அடையாள அட்டை ஆகியவற்றை வழங்கினார்.

விழாவுக்கு கல்லூரி முதல்வர் கா. குமார் தலைமை வகித்தார். நூலகர் முனைவர் த. சுரேஷ்குமார், நூலக விதிமுறைகள், இ-புத்தகங்கள், இ- நாளிதழ்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், இதர புத்தகங்கள், பயிற்சி கையேடுகளை மாணவர்கள் அவரவர் கைப்பேசியிலேயே பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் குறித்தும், நவீன கணினிமயமாக்கப்பட்ட கல்லூரி நூலகத்தின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமளித்தார்.

நூலகத்தில் உள்ள கற்றல் வளங்கள் முழுவதையும் இளங்கலை மாணவர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்து செயல்முறை விளக்கம் அளித்தார்.

கல்லூரியின் துணை முதல்வர்கள் பிரசன்ன பாலாஜி, இளவரசு, நூலக தட்டச்சு பயிற்றுநர் அன்புமணி, துணை நூலகர் ராதா ஜெயலட்சுமி, நூலக அலுவலர்கள் லட்சுமணன், கலியமூர்த்தி, உமா மகேஸ்வரி, ஹரிஹரன் உள்ளிட்டோர் பங்கேற்று நூலகத்தின் சிறப்புகள் குறித்து விளக்கி கூறினர். இந்த பயிற்சியில் இளங்கலை மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தினமலர் | திருச்சி | 18.7.2023 | 3

# நூலக பயிற்சி பட்டறை

**திருச்சி, ஜூலை 18 –**

திருச்சி தேசியக்கல்லூரியில் இளநிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஒரு நாள் நூலக பயிற்சி பட்டறை கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார். செயலாளர் ரகுநாதன், ஆர்எப்ஐடி மற்றும் பார்கோடுடன் கூடிய கல்லூரி மற்றும் நூலக அடையாள அட்டைகளை மாணவர்களுக்கு வழங்கினார்.

கல்லூரி நூலகர் சுரேஷ்குமார், நூலக விதிமுறைகள் மற்றும் நூலக நவீனத்துவம் குறித்தும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நூலக வளங்களை எவ்வாறு செல்போன் மூலம் பெறுவது குறித்தும் விளக்க உரையாற்றினார். கல்லூரி துணை முதல்வர் பிரசன்னபாலாஜி, இளவரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை கல்லூரி நூலக அலுவலர்கள் லட்சுமணன், கலியமூர்த்தி, உமா மகேஸ்வரி, ஹரிஹரன் செய்திருந்தனர். கல்லூரி நூலக தட்டச்சு பயிற்றுனர் அன்புமணி வரவேற்றார். துணை நூலகர் ராதா ஜெயலட்சுமி நன்றி கூறினார்.

**Field Work for Library Professional Students**

There are six students from **Holy Cross College** (Autonomous), Department of Library and Information Science, who came on September 11, 2023, to our Resource Centre for a one-day library field work. The National College Principal, Dr.K. Kumar, has welcomed and advised them of the value of education and the role of libraries in research. The college librarian Dr.T.Sureshkumar and library staff members have given explanations about the routine work and orientation of library operations and new technology implementation. Those students practiced one day in our resource centre.



## National College (Autonomous)
### Library Internship Programme

தேசியக்கல்லூரி நூலகத்துறை வேலைவாய்ப்பு பயிற்சி நிறைவு விழா 04.09.2023 அன்று திருச்சி தேசியக்கல்லூரியின் நூலகவியல் துறையில் “நூலக வேலைவாய்ப்புப் பயிற்சிப் பட்டறை” நிறைவு விழா நடைப்பெற்றது. திருச்சி **ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்** முதுநிலை நூலகம் மற்றும் தகவியல்துறை மாணாக்கர்கள் 4பேர் இப்பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்றனர். இப்பயிற்சி 4.09.2023 முதல் 08.09.2023 வரை ஒரு வார காலமும் நடைபெற்றது மேலும் இப்பயிற்சியில் நூலக மேலாண்மை, நூலகப் பகுப்பாய்வு, நூலகசெயல்பாடு, புதியஉத்திகள் மற்றும் நூலகத்தில் கணினி பயிற்சி மேம்பாடு குறித்து மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையின் நிறைவு விழா 08.09.2023 அன்று நடைபெற்றது. தேசிய கல்லூரியின் செயலர் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். மேலும் புது வாழ்க்கையைத் தேடுபவர்களுக்கு நூலகமே சிறந்த வழி என்றும் அறிவார்ந்த சமுதாயம் நூலகத்தால் மட்டுமே சாத்தியப்படும் என்று பொருள்பட சிறப்புரையாற்றினார். முதல்வர் முனைவர் க. குமார் விழாவில் பங்கேற்று வாழ்த்துறை வழங்கினார். கல்லூரியின் பயிற்சிப்பட்டறையின் ஒருங்கிணைப்பாளரும் நூலகவியல் துறைத்தலைவருமாகிய முனைவர் த. சுரேஷ்குமார் நன்றியுரை நல்கினார். துணைமுதல்வர் முனைவர் பிராசன்னா பாலாஜி மற்றும் பேராசிரியர்களும் நூலக உதவிநூலகர் திருமதி ராதாஜெயலெட்சுமி, நூலக உதவியாளர்கள் திரு லெட்சுமணன், திரு கலியமூர்த்தி, திருமதி உமா மகேஷ்வரி, திரு ஹரிஹரான் தட்டச்சு பயிற்சியாளர் திருமதி.அன்புமணி மற்றும் மாணவ மாணவிகளும் விழாவில் திரளாகப் பங்கேற்றனர்.



மாலை முரசு 9:9:23 Page No: 5



தேசியக் கல்லூரி நூலகத்துறை சார்பில்

# வேலைவாய்ப்பு பயிற்சி நிறைவு விழா

திருச்சி, செப். 9—

திருச்சி தேசியக்கல்லூரியின் நூலகவியல் துறையில் நூலக வேலைவாய்ப்புப் பயிற்சிப் பட்டறை நிறைவு விழா நடைப்பெற்றது. திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதுநிலை நூலகம் மற்றும் தகவியல் துறை மாணவர்கள் 4 பேர் இப்பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்றனர். இப்பயிற்சி ஒரு வார காலம் நடைபெற்றது. மேலும் இப்பயிற்சியில் நூலக மேலாண்மை, நூலகப்பகுப்பாய்வு, நூலகசெயல்பாடு, புதிய உத்திகள் மற்றும் நூலகத்தில் கணி ஒனி பயிற்சி மேம்பாடு குறித்து மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையின் நிறைவு விழா நடைபெற்றது. பயிற்சி பெற்ற தேசிய கல்லூரியின் மாணவர்களுக்கு செயலர் ரகுநாத் சான்றிதழ்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் குமார் வாழ்த்துரை வழங்கினார். முடிவில் கல்லூரியின் பயிற்சிப்பட்டறையின் ஒருங்கிணைப்பாளரும் நூலக வியல் துறை த்தலைவருமான சுரேஷ்குமார் நன்றி கூறினார். நிகழ்ச்சியில்துணைமுதல்வர் பிராசன்னா பாலாஜி மற்றும் பேராசிரியர்களும் நூலக உதவி நூலகர் ராதாஜெயலெட்சுமி, நூலக உதவியாளர்கள் லெட்சுமணன், கலியமூர்த்தி, உமா மகேஷ்வரி, ஹரிஹரான் தட்டச்சு பயிற்சியாளர் அன்புமணி மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



தேசிய கல்லூரியின் நூலகத்துறை வேலைவாய்ப்பு பயிற்சி நிறைவு விழா நடந்த போது எடுத்த படம்.

## தேசிய கல்லூரியின்

# நூலகத்துறை வேலைவாய்ப்பு பயிற்சி நிறைவு விழா

திருச்சி,செப்.9—

திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதுநிலை நூலகம் மற்றும் தகவல் துறை மாணவர்கள் 4 பேர் தேசிய கல்லூரியின் பயிற்சி பட்டறையில் பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சியில் நூலக மேலாண்மை, நூலகப் பகுப்பாய்வு, நூலக செயல்பாடு புதிய உத்திகள் மற்றும் நூலகத்தில் கணினி பயிற்சி ,மேம்பாடு குறித்து மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது.

பயிற்சி பட்டறை நிறைவு விழாவில் தேசிய கல்லூரியின் செயலாளர் விழாவிற்கு தலைமையேற்று பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். மேலும் புது வாழ்க்கையை தேடுபவர்களுக்கு நூலகமே சிறந்த வழி என்றும் அறிவார்ந்த சமுதாயம் நூலகம் மட்டுமே சாத்தியப்படும் என்று பொருள்பட முதல்வர் குமார் வாழ்த்தி பேசினார்.

கல்லூரியின் பயிற்சி பட்டறை ஒருங்கிணைப்பாளரும் நூலகவியல் துறை தலைவருமாகிய சுரேஷ் குமார் நன்றி கூறினார். துணை முதல்வர் பிரசன்னா பாலாஜி மற்றும் பேராசிரியர்களும் உதவி நூலகர் ராதா ஜெயலட்சுமி நூலக உதவியாளர்கள் லட்சுமணன், கலியமூர்த்தி, உமா மகேஸ்வரி, ஹரிஹரன் தட்டச்சு பயிற்சியாளர் அன்புமணி மற்றும் மாணவ மாணவிகளும் விழாவில் திரளாக பங்கேற்றனர்.

# National College (Autonomous)

Nationally Re-accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence

Tiruchirappalli

# Department of Library and Information Science

## CENTRAL LIBRARY



**Chief Guest**



**Dr.S.Srinivasa Ragavan**

Controller of Examination (i/c), HOD of DLIS

Bharathidasan University, Tiruchirappalli-24

You are Cordially Invites for the

## CERTIFICATE DISTRIBUTION CEREMONY

For C.L.I.Sc., - 2022 Batch

**Date**

**27th Sep 2023**

**Time**

12.01 pm to 1.00 pm

**Venue**

**Library Audio Visual Theatre**

| Principal | Librarian | Secretary |
| --- | --- | --- |
| **Dr.K.Kumar** | **Dr.T.Sureshkumar** | **Shri.K.Raghunathan** |


RESOURCE CENTRE

## தேசிய கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 001

## சான்றிதழ் படிப்பிற்கான சான்றிதழ் வழங்கும் விழா-2023

திருச்சி தேசிய கல்லூரியில் இன்று (27.09.2023) நூலக மட்டும் தகவல் அறிவியல் துறை சார்பாக சான்றிதழ் படிப்பிற்கான சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது.

நூலக தகவல் அறிவியல் துறையின் ஆறு மாத சான்றிதழ் படிப்பு முடித்த 32 தேசிய கல்லூரி மாணவர்களுக்கு இன்று பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் முனைவர் எஸ் ஸ்ரீனிவாச ராகவன் அவர்கள் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

தேர்வு நெறியாளர் சிறப்புரை நிகழ்த்தும் பொழுது, சான்றிதழ் படிப்பு முடித்த நூலகவியல் மாணவர்களுக்கு நிறைய வேலை வாய்ப்புகள் இருப்பதை சுட்டிக்காட்டினார். ஆராய்ச்சி துறை, தொழில்நுட்பத்துறை, மாவட்ட பொது நூலகங்கள், கிராமப்புற நூலகங்கள், பள்ளி மற்றும் கல்லூரி நூலகங்களில் நூலக உதவியாளர்கள் மற்றும் நூலகர்களுக்கான வாய்ப்புகள் இருப்பதை சுட்டிக்காட்டினார். மேலும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்கள் தங்கள் ஆராய்ச்சி படிப்பின் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் இந்த நூலகவியல் படிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அவர் உரையில் சுட்டிக்காட்டினார்.

மேலும் சிறப்பு விருந்தினர் பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் முனைவர் ஸ்ரீனிவாச ராகவன் அவர்கள் பேசும் பொழுது மாணவர்கள் இதுபோன்ற சான்றிதழ் மற்றும் பட்டைய படிப்புகள் படிப்பதன் மூலம் அவர்கள் தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்வதுடன் தங்களுடைய வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் தங்களுடைய தகுதியை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் கா ரகுநாதன் அவர்கள் சான்றிதழ் பெற்ற மாணவர்களை பாராட்டினார். கல்லூரி முதல்வர் K. குமார் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். துணை முதல்வர்கள் முனைவர் பென்னட், முனைவர் இளவரசு மற்றும் முனைவர் பிரசன்ன பாலாஜி ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டு தெரிவித்தனர்.

கல்லூரி நூலகர் மற்றும் நூலக தகவல் அறிவியல் துறையின் ஒருங்கிணைப்பாளருமான த.சுரேஷ்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். நூலக அறிவியல் துறையின் மாணவர்கள் பாலமுருகன் அனைவரையும் வரவேற்றார், தர்மேஷ் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியுரை நல்கினார்.

இவ்விழாவினை நூலக உதவி நூலகர் ராதா ஜெயலட்சுமி, நூலக உதவியாளர்கள் அன்புமணி, லட்சுமணன், கலியமூர்த்தி, உமா மகேஸ்வரி மற்றும் ஹரிஹரன் ஆகியோர் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் விழாவில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தினமலர் திருச்சி 28 : 9 : 23 7

## கல்வி




திருச்சி தேசிய கல்லூரியில் நூலகத் துறை சார்பில் நடந்த நிகழ்ச்சியில் சான்றிதழ் மற்றும் பட்டய படிப்பிற்கான சான்றிதழ்களை பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் சீனிவாசராகவன் வழங்கினார்.

# சான்றிதழ் வழங்கும் விழா

திருச்சி: திருச்சி தேசிய கல்லூரி நூலக மற்றும் தகவல் அறிவியல் துறை சார்பில் சான்றிதழ் மற்றும் பட்டய படிப்பிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார். நூலக தகவல் அறிவியல் துறையின் 6 மாத சான்றிதழ் படிப்பு முடித்த 32 மாணவர்களுக்கு பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் சீனிவாசராகவன் சான்றிதழ்கள் வழங்கி பேசுகையில்: சான்றிதழ் படிப்பு முடித்த நூலகவியல் மாணவர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன. ஆராய்ச்சி துறை, தொழில்நுட்பத்துறை, மாவட்ட பொது நூலகங்கள், கிராமப்புற நூலகங்கள், பள்ளி, கல்லூரி நூலகங்களில் நூலக உதவியாளர்கள், நூலகர்கள் பணி வாய்ப்புகள் இருக்கிறது. மாணவர்கள் இதுபோன்ற சான்றிதழ் மற்றும் பட்டய படிப்புகள் படிப்பதால் அறிவை வளர்த்துக் கொள்வது டன் வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் தகுதியையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும், என்றார்.

கல்லூரி செயலர் ரகுநாதன் சான்றிதழ் பெற்ற மாணவர்களை பாராட்டினார். துணை முதல்வர்கள் பென்னட், இளவரசு, பிரசன்ன பாலாஜி, ஒருங்கிணைப்பாளர் சுரேஷ்குமார், ராதா ஜெயலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர். மாணவர் பாலமுருகன் வரவேற்றார். தர்மேஷ் நன்றி கூறினார்.

# NATIONAL COLLEGE

(Autonomous)

**College with Potential for Excellence**

**Nationally Re-Accredited with 'A+' Grade by NAAC**

**TIRUCHIRAPALLI - 620 001**

Since 1919

DEPARTMENT OF LIBRARY AND INFORMATION SCIENCE

*Cordially Invites you to the*

## CERTIFICATE DISTRIBUTION CEREMONY

**of the Internship Training of Librarianship**

**on 18th November 2023, 11.30 am.**




*Venue: AV Hall: [Resource Centre]*

Certificate Distribution by

## SHRI. K. RAGHUNATHAN

Secretary

National College (Autonomous)Tiruchirappalli-620001

Principal
**Dr.K.Kumar**

Librarian
**Dr.T.Sureshkumar**

## தேசியக் கல்லூரி நூலகத்துறை பயிற்சி பட்டறை நிறைவு விழா

தேசியக்கல்லூரியில் 18.11.2023 அன்று திருச்சி தேசியக்கல்லூரியின் நூலகவியல் துறையில் "நூலக வேலைவாய்ப்புப் பயிற்சிப் பட்டறை நிறைவு விழா" தொடங்கியது. திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் முதுநிலை நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை முதாலம் ஆண்டு மாணாக்கர்கள் 8 பேர் இப்பயிற்சிப் பட்டறையில் 14.11.2023 முதல் 18.11.2023 வரை ஏழு நாட்கள் பயிற்சி பெற்றனர். நூலக மேலாண்மை, நூலகப் பகுப்பாய்வு, நூலகசெயல்பாடு, புதியஉத்திகள் மற்றும் நூலக மென்பொருள் மேலாண்மை, மின் நூலகபயன்பாடு, மின்இதழ் பற்றிய பயன்பாடு குறித்து இப்பயிற்சியில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையின் நிறைவு விழா 18.11.2023 அன்று நடைபெற்றது. பயிற்சிப்பட்டறையின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் நூலகவியல் துறைத்தலைவர் முனைவா **த. சுரேஷ்குமார்** வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் செயலர் திரு.க.ரகுநாதன் அவர்கள் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினார் மேலும் வளர்ந்து வரும் நூலகர்களாகிய நீங்கள் தற்பொழுது வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு தகுந்தார் போல் தங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம் தேசிய கல்லூரி நூலகத்தின் உள்ள நூல்கள், மின்-இதழ்கள், ஆராய்ச்சி கட்டுரைகள் போன்ற அனைத்து விதமான ஆவணங்களையும் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் அலைபேசியின் வாயிலாகவே எப்பொழுது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் தொழில்நுட்பம் செயல்பாட்டில் உள்ளது. இதை போன்று வருங்கால நூலகர்களாகிய நீங்கள் இக்காலத்திற்கு ஏற்றார் போல் தங்கள் தொழில்நுட்ப திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பொருள்பட சிறப்புரையாற்றினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் கி. குமர்ர் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று சிறப்புரை நிகழ்த்தினார். தட்டச்சு பயிற்சியாளர் திருமதி.அன்புமணி நன்றியுரை நல்கினார். பேராசிரியர்களும் நூலக உதவிநூலகர் திருமதி ராதாஜெயலெட்சுமி, நூலக உதவியாளர்கள் திரு லெட்சுமணன், திரு கலியமூர்த்த, திருமதி உமா மகே'வா, திரு.ஹர்ரிஹரான் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கெண்டனர்.


OUT

தினமலர் | திருச்சி | 20.11.2023

# நூலக வேலைவாய்ப்பு பயிற்சி

**திருச்சி, நவ. 20–**

திருச்சி தேசிய கல்லூரி நூலகத்துறை சார்பில் நூலக வேலை வாய்ப்பு பயிற்சி முகாம் நடந்தது.

முகாமில் நூலக மேலாண்மை, செயல்பாடு, புதிய உத்திகள், பகுப்பாய்வு, மின் நூலக பயன்பாடு, மின் இதழ் ஆகியவை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. நிறைவு விழாவுக்கு கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார்.

கல்லூரி செயலாளர் ரகுநாதன் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பேசுகையில், ''வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் நூலகர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொண்டு அதற்கேற்ற வகையில் திறமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றார்.

நிகழ்ச்சியில் உதவி நூலகர் ராதாஜெயலட்சுமி, உதவியாளர்கள் லட்சுமணன், உமா மகேஸ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர். துறைத் தலைவர் சுரேஷ் குமார் வரவேற்றார். தட்டச்சு பயிற்சியாளர் அன்புமணி நன்றி கூறினார்.

**Vikshat Bharat @2024**

The National College (Autonomous), Tiruchirappllі, has participated and organised in the Vikshat Bharat @2024 on 18th December-2023. Bharathidasan University professor and this event representative, Dr. Jayaprkash, have participated, motivated, and explained the objective of this. The Department of Library and Information Science at National College (Autonomous) has organised the above event, and each young student has participated and suggested their own ideas to improve our country's growth in the future.

There are more than 500 students who have participated and benefited.




National College (Autonomous)

# NATIONAL COLLEGE

Since 1919

**(Autonomous)**

**College with Potential for Excellence**

**Nationally Re-Accredited with 'A+' Grade by NAAC**

**TIRUCHIRAPALLI - 620 001**

DEPARTMENT OF LIBRARY AND INFORMATION SCIENCE

*Cordially Invites you to the*

**Awareness Programme**

## Pradhan Mantri Kaushal Vikas Yojana Centre




SKILL INDIA

कौशल भारत कुशल भारत

**on 8th January 2024, 12.20 PM.**

## Skill India Mission

**Transforming your Future**



*Venue: AV Hall: [Resource Centre]*

***Guest Speaker***

## SHRI. R.JEGADEESAN

**Regional Manager**

JET, Tiruchirappalli

| Secretary | Principal | Librarian |
| --- | --- | --- |
| Shri.K.Raghunathan | Dr.K.Kumar | Dr.T.Sureshkumar |


NATIONAL COLLEGE



# Pradhan Mantri Kaushal Vikas Yojana Skills India: Awareness Programme

The department of library and information Science, National College (Autonomous) has organized a awareness programme about Pradhan Mantri Kaushul Vikas Yojana Center Skill India Mission transforming your future on 8th January 2024 at our Library AV Hall. There are 100 students are participated and the Chief guest Mr. R.Jegadeesan, Regional Manager, Jeyaram Educational Trust, Tiruchirappalli. He spoke about the central government free Skill based education offered by our Indian government. The resource person has advised to our students may utilize that the maximum resources of our Pradhan Mantri Kaushal Vikas Yojana. This is purely based on the skill development programme. Our college Secretary, Principal, staff and students are part of this programme. Finally, the vote of thanks was given by Dr.Akila Shri, Head of the Department . of Computer Science at the National College.

## Programme

- Prayer
  College Song
  followed by Thamilthai Vazhthu

- Welcome Address
  **Dr. K.Kumar**
  Principal, National College (Autonomous)
  Tiruchirappalli.

- Honoring the Chief Guest
  **Shri. K. Raghunathan**
  Secretary, National College (Autonomous)
  Tiruchirappalli.

- Introduction of the Chief Guest Address
  **Dr. S. Neelagandan**
  Associate Professor, Department of Tamil
  National College (Autonomous)
  Tiruchirappalli.

- Endowment Lecture
  **Sri. V. Irai Anbu**
  Former Chief Secretary, Tamil Nadu

- Vote of Thanks
  **Dr. D. Prasanna Balaji**
  Vice Principal
  National College (Autonomous)
  Tiruchirappalli.

- National Anthem

DR V KRISHNAMURTHY
Educational Foundation
TIRUCHIRAPPALLI

Estd. 1919

# NATIONAL COLLEGE

**(Autonomous)**
Nationally Re-Accredited at 'A+' Grade by NAAC
College with Potential for Excellence
A unit of Dr. V.Krishnamurthy Educational Foundation
Tiruchirappalli, Tamil Nadu, India - 620001



# Dr. S.R.RANGANNATHAN
## ENDOWMENT LECTURE

**14.03.2024, Thursday**



**Sri. V. IRAI ANBU**
Former Chief Secretary
Tamil Nadu.

DR V KRISHNAMURTHY
Educational Foundation
TIRUCHIRAPPALLI

Estd. 1919

The Management, Principal, Staff, Alumini & Students of

# NATIONAL COLLEGE

**(Autonomous)**
Nationally Re-Accredited at 'A+' Grade by NAAC
College with Potential for Excellence
A unit of Dr. V.Krishnamurthy Educational Foundation
Tiruchirappalli, Tamil Nadu, India - 620001

*Solicit the pleasure of your presence at the*

## Dr. S.R. RANGANATHAN ENDOWMENT LECTURE

to be held on **14th March 2024, Thursday** at 04.00 p.m.
in the Dr. V. Krishnamurthy Auditorium

**Sri. V. IRAI ANBU**
Former, Chief Secretary
Tamilnadu

*has graciously consented to deliver a lecture on*

**காகிதம் எனும் ஆயுதம்**

**Shri. K.RAGHUNATHAN**
Secretary, National College

**Dr. K. KUMAR**
Principal, National College

**Dr. T. SURESHKUMAR**
Librarian


COLLEGE
NATIONAL COLLEGE (Autonomous)
Nationally Re-Accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence
A unit of Dr. V.Krishnamurthy Educational Foundation, Tiruchirappalli - 620 001
Dr. S.R. RANGANATHAN
DOWMENT LECTURE
காகிதம் எனும் ஆயுதம்
14.03.2024, Thursday

National College (Autonomous)

Dr.S.R. Ranganathan Endowment Lecture-2023-24 on 14th Mar-2024

Department of Library and Information Science

நூலகம் அறிவுப் புதையல் திருச்சி தேசிய கல்லூரியில் தமிழ்நாடு மேனால் தலைமைச் செயலர் இறையன்பு பேச்சு திருச்சிராப்பள்ளி தேசிய கல்லூரியில் நூலகத் தந்தை எஸ் ஆர் ரங்கநாதன் அறக்கட்டளை பொழிவு நடைபெற்றது தமிழக மேனாள் தலைமைச் செயலர் என்பவர்கள் காகிதம் எனும் ஆயுதம் எனும் தலைப்பில் உரையாற்றினார் விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் கே குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார் வரவேற்புரையில் இறையன்பு அவர்களின் நேர்மையான நிர்வாக திறன் கூர்மையான வாசிப்பு திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தினார் சிறப்பு விருந்தினர்உயர்திரு வே இறையன்பு அவர்களை கல்லூரியின் இணை பேராசிரியர் முனைவர்சா நீலகண்டன் அறிமுகப்படுத்தினார்

காகிதம் எனும் ஆயுதம் எனும் தலைப்பில் உரையாற்றிய உயர்திரு வெ. இறையன்பு அவர்கள்மின்னணு கருவிகள் வாயிலாக நூல்களைப் படிப்பது கரும்பை சாறு பிழிந்து குடிப்பது போல புத்தகத்தை நேரடியாக வாசிப்பது கரும்பை கடித்து உண்பது போல அதன் அனுபவம் சுக அனுபவம் ஆனது புத்தகத்தின் நேரடி வாசிப்பு நம்மை வாழ்வியலுக்கு இட்டுச் செல்லும் ஒரு புத்தக வாசிப்பு 100 புத்தகங்களை வாசிக்க அழைக்கும் நூலக வாசிப்பு நம்மை அறிவை விரிவு செய்யும் எல்லோருக்கும் புத்தகங்கள் கிடைப்பதின் மூலம் அறிவை ஜனநாயக படுத்த முடியும் என்ற கருத்துக்களை வழங்கினார் கல்லூரி செயலர் திருமதி கே ரகுநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினரை கௌரவித்தார் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் பிரசன்ன பாலாஜி நன்றி உரை வழங்கினார்.விழா ஏற்பாடுகளை கல்லூரி நூலகர் முனைவர் சதீஷ்குமார் செய்திருந்தார் பேராசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்

உயர்திரு வெ இறையன்பு ஐஏஎஸ் அவர்களின் உரை பேச்சு மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்தி காட்டியது. எழுத்து நாகரீகம் அற்ற மனிதனை விட நாகரீகமான மனிதனின் நிலைக்கு உயர்த்தியது. நூலகத் தந்தை எஸ் ஆர் ரங்கநாதன் அவர்கள் உடல்நலத்தில் குறை இருந்த போதும் நூல்களைப் படிக்கச் சொல்லி கேட்டு கேட்டு தன் அறிவை வளர்த்துக் கொண்டார் இலண்டனில் நூல்களைப் படிப்பதற்கான பயிற்சி மேற்கொண்டா.ர் அதில்

தினத்தந்தி 15:3:24 page NO: 11



# புத்தகத்தை நேரடியாக வாசிப்பது நம்மை வாழ்வியலுக்கு இட்டுச்செல்லும்

## தேசிய கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் இறையன்பு பேச்சு


திருச்சி, மார்ச்.15-

திருச்சி தேசிய கல்லூரியில் நூலகத் தந்தை எஸ்.ஆர்.ரங்கநாதன் அறக்கட்டளை சார்பில் சொற்பொழிவு நடைபெற்றது. விழாவில் கல்லூரி முதல்வர் கே.குமார் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக தமிழக முன்னாள் தலைமை செயலர் இறையன்பு கலந்து கொண்டு காகிதம் எனும் ஆயுதம் என்ற தலைப்பில் உரையாற்றியனார். அப்போது மின்னணு கருவிகள் வாயிலாக நூல்களைப் படிப்பது கரும்பை சாறு பிழிந்து குடிப்பது போன்றது. புத்தகத்தை நேரடியாக வாசிப்பது கரும்பை கடித்து உண்பது போல, அதன் அனுபவம் சுக அனுபவம் ஆனது. புத்தகத்தின் நேரடி வாசிப்பு நம்மை வாழ்வியலுக்கு இட்டுச்செல்லும். ஒரு புத்தக வாசிப்பு 100 புத்தகங்களை வாசிக்க அழைக்கும். நூலக வாசிப்பு நமது அறிவை விரிவு செய்யும். எல்லோருக்கும் புத்தகங்கள் கிடைப்பதின் மூலம் அறிவை ஜனநாயகப்படுத்த முடியும் என்றார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரி நூலகர் சதீஷ்குமார் செய்திருந்தார். விழாவில் கல்லூரி செயலர் ரகுநாதன், கல்லூரியின் இணை பேராசிரியர் நீலகண்டன், பேராசிரியர்கள் மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கல்லூரி துணை முதல்வர் பிரசன்ன பாலாஜி நன்றி கூறினார்.

★ ★15-03-2024

தஞ்சை மாலை முரசு-திருச்சி பதிப்பு




தேசிய கல்லூரியில்

# சொற்பொழிவு

## முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு பங்கேற்பு

திருச்சி, மார்ச் 15

திருச்சி தேசிய கல்லூரியில் ரங்கநாதன் அறக் கட்டளை சொற்பொழிவு நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார். தமிழ் நாடு முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு, காகிதம்எனும் ஆயுதம் என்ற தலைப்பில் பேசியதாவது:

நேரடி வாசிப்பு என் பது நம்மை வாழ்விய லுக்கு அழைத்து செல்லும் ஒரு சுக மான அனுபவம். நூலக ங்களில் 100 புத்த கங்களை வாசிப்பது நமது அறிவை விரிவாக்கும். கல்வி மட்டுமே வாழ்வில்உ யர்நிலை தரக்கூடியது என்று பேசினார். நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் ரகுநாதன், பேராசிரியர் நீலகண்டன், நூலகர் சுரேஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். பிரசன்ன துணை முதல்வர் பாலாஜி நன்றி கூறினார்.

15.3.2024

தினகரன் திருச்சி

# நூல்களை நேரடியாக வாசிப்பதில்தான் சுக அனுபவம் கிடைக்கும்

## தேசிய கல்லூரி நிகழ்ச்சியில் இறையன்பு பேச்சு




திருச்சி, மார்ச் 15: திருச்சி தேசிய கல்லூரியில் நூலகத் தந்தை எஸ்.ஆர்.ரங்கநாதன் அறக்கட்டளை பொழிவு நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழக முன்னாள் தலைமைச் செயலர் இறையன்பு கலந்து கொண்டு, காகிதம் எனும் ஆயுதம் எனும் தலைப்பில் பேசியதாவது: பேச்சு மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது.

எழுத்து நாகரீகம் அற்ற மனிதனை விட நாகரீகமான மனிதனின் நிலைக்கு உயர்த்தியது. நூலகத் தந்தை எஸ். ஆர்.ரங்கநாதன் உடல் நலத்தில் குறை இருந்த போதும் நூல்களைப் படிக்கச் சொல்லி கேட்டு கேட்டு தன் அறிவை வளர்த்துக் கொண்டார். லண்டனில் நூல்களைப் படிப்பதற்கான பயிற்சி மேற்கொண்டார். அதில் அவருக்கு நிறைவு இல்லை. அவர் வகுத்த முறைதான் இன்றும் நூலகங்களில் பின்பற்றப்படுகிறது. இணையத்தில் நூல்களை வாசிப்பது கரும்பை சாறு பிழிந்து குடிப்பது போல. நூல்களை நேரடியாக வாசிப்பது தான் கரும்பை கடித்து உண்பது போல அதில் சுக அனுபவம் கிடைக்கும் என்று பேசினார். கல்லூரி முதல்வர் முனைவர் குமார் தனது வரவேற்புரையில், இறையன்பு அவர்களின் நேர்மையான நிர்வாக திறன் கூர்மையான வாசிப்பு திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தினார். கல்லூரியின் இணை பேராசிரியர் முனைவர் நீலகண்டன் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார்.

கல்லூரி செயலர் ரகுநாதன் சிறப்பு விருந்தினரை கவுரவித்தார். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் பிரசன்ன பாலாஜி நன்றி கூறினார்.

## கல்வி




திருச்சி தேசிய கல்லூரியில் நடந்த ரங்கநாதன் அறக்கட்டளை சொற்பொழிவில் தமிழ்நாடு முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு பேசினார். அருகில் கல்லூரி முதல்வர் குமார் உட்பட பலர்.

# கல்வி மட்டுமே உயர்வு தரும்: இறையன்பு திட்டவட்டம்

**திருச்சி, மார்ச் 15–**

திருச்சி தேசிய கல்லூரியில் ரங்கநாதன் அறக்கட்டளை சொற்பொழிவு நேற்று நடந்தது.

கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார். தமிழ்நாடு முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு, காகிதம் எனும் ஆயுதம் என்ற தலைப்பில் பேசியதாவது:

நேரடி வாசிப்பு என்பது நம்மை வாழ்வியலுக்கு அழைத்து செல்லும் ஒரு சுகமான அனுபவம். நூலகங்களில் 100 புத்தகங்களை வாசிப்பது நமது அறிவை விரிவாக்கும். கல்வி மட்டுமே வாழ்வில் உயர்நிலை தரக்கூடியது என்றார்.

நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் ரகுநாதன், பேராசிரியர் நீலகண்டன், நூலகர் சுரேஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். துணை முதல்வர் பிரசன்ன பாலாஜி நன்றி கூறினார்.

## கல்வி




திருச்சி தேசிய கல்லூரியில் நடந்த ரங்கநாதன் அறக்கட்டளை சொற்பொழிவில் தமிழ்நாடு முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு பேசினார். அருகில் கல்லூரி முதல்வர் குமார் உட்பட பலர்.

# கல்வி மட்டுமே உயர்வு தரும்: இறையன்பு திட்டவட்டம்

**திருச்சி, மார்ச் 15–**

திருச்சி தேசிய கல்லூரியில் ரங்கநாதன் அறக்கட்டளை சொற்பொழிவு நேற்று நடந்தது.

கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார். தமிழ்நாடு முன்னாள் தலைமை செயலாளர் இறையன்பு, காகிதம் எனும் ஆயுதம் என்ற தலைப்பில் பேசியதாவது:

நேரடி வாசிப்பு என்பது நம்மை வாழ்வியலுக்கு அழைத்து செல்லும் ஒரு சுகமான அனுபவம். நூலகங்களில் 100 புத்தகங்களை வாசிப்பது நமது அறிவை விரிவாக்கும். கல்வி மட்டுமே வாழ்வில் உயர்நிலை தரக்கூடியது என்றார்.

நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் ரகுநாதன், பேராசிரியர் நீலகண்டன், நூலகர் சுரேஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். துணை முதல்வர் பிரசன்ன பாலாஜி நன்றி கூறினார்.

# புத்தக வாசிப்பு, மனிதனை விரிவடையச் செய்யும்! தேசியக்கல்லூரியில் வெ.இறையன்பு அறிவுரை!!




திருச்சி தேசியக்கல்லூரியில், நூலகத்தந்தை எஸ்.ஆர்.ரங்கநாதன் அறக்கட்டளை சொற்பொழிவு நடைபெற்றது. இதில் தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவரை கல்லூரிச் செயலர், வழக்கறிஞர் கே.ரகுநாதன் கௌரவப்படுத்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் கி.குமார் வரவேற்றார். இதில் காகிதம் எனும் ஆயுதம் எனும் தலைப்பில் வெ.இறையன்பு அவர்கள் பேசும் போது, இணையத்தில் நூல்களை வாசிப்பது கரும்புச் சாறை பிழிந்து குடிப்பது போல் இருக்கும் என்றும், நேரடியாக வாசிப்பதுதான் கரும்பை கடித்து உண்பது போல சிறப்பாக இருக்கும். புத்தக வாசிப்பு என்பது மனிதனை விரிவடையச் செய்யும். அதனால்தான் அக்பர், அலாவுதீன்கில்ஜி ஆகியோர் புத்தகம் வாசிக்க தெரியாவிட்டாலும், புத்தகத்தை வாசிக்கச் சொல்லிக் கேட்டு, அறிவை வளர்த்துக் கொண்டார்கள் என்றார். கல்லூரி இணை பேராசிரியர் முனைவர் சா. நீலகண்டன் சிறப்பு விருந்தினரை முன்னதாக அறிமுகப் படுத்தினார். கல்லூரி துணை முதல்வர் முனைவர் பிரசன்னபாலாஜி நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கல்லூரி நூலகர் முனைவர் சதீஷ்குமார் செய்திருந்தார்.

DR V KRISHNAMURTHY
Educational Foundation
TIRUCHIRAPPALLI

Estd. 1919

# NATIONAL COLLEGE (Autonomous)

Nationally Re-Accredited at 'A+' Grade by NAAC | College with Potential for Excellence
A unit of Dr. V.Krishnamurthy Educational Foundation
**Tiruchirappalli, Tamil Nadu, India - 620001**

*Cordially Invites you for the*

# Library Day Celebration

to be held on **Monday, 08 April 2024,** at 11.30 a.m.
in the Library (Audio Visual Hall)

## Chief Guest



திருமதி **வ.பிரியா**

(தேசியக்கல்லூரியின் முன்னாள் மாணவி)

**உதவிப்புவியியலாளர்**
**வேளாண்மை பொறியியல் துறை, புதுக்கோட்டை**

## Guest of Honour

முனைவர் **சா.நீலகண்டன்**

**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**



*has graciously consented to deliver a lecture on*

**பாதை தெரியுது பார்**

**Shri. K. Raghunathan**
Secretary, National College (Autonomous)
**Distributes Prizes to the Best Library users**



**Dr. K.Kumar**
Principal

**Dr. T.Suresh Kumar**
Librarian


National
Learning

# தேசியக் கல்லூரியில் இன்று நூலக விழா-2024

திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியில் இன்று நூலக விழா நடைபெற்றது.புதுக்கோட்டை வேளாண்மைப் பொறியியல் துறை உதவி புவியியலாளர் மற்றும் தேசியக் கல்லூரியின் முன்னாள் மாணவி திருமதி வ. பிரியா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இக்கல்லூரியில் நான் இளம் அறிவியல் ,முதுநிலை அறிவியல் படித்த ஐந்து ஆண்டுகளில் பட்டம் பெற்றதோடு மட்டுமல்லாமல் கல்லூரியில் நூலகத்தில் நான் எடுத்த குறிப்புகள் தான் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் தேர்வில் வெற்றி பெற வழி வகுத்தது. இக்கல்லூரியில் நான் எடுத்த குறிப்புகளே என் சொத்தாக இன்றுவரை மதிக்கிறேன்.

நூலகமே எனும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் திசைகாட்டியாகவும் ஊடகமாகவும் விளங்கியது. பல தேர்வுகளை நோக்கிப் பயணிக்கிற ஒரு பரந்த அறிவையும் எனக்கு ஊட்டியது. நூலகம் எனக்கு சிறந்த நண்பனாகவும் விளங்கியது ஈடுபாட்டுடன் படிக்க கற்றுக் கொடுத்தது போன்ற அனுபவங்களை வெற்றியாளராக வெளிப்படுத்தினார். கல்லூரியின் தமிழ் த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் சா நீலகண்டன் பாதை தெரியுது பார் என்கிற தலைப்பில் உரை நிகழ்த்தினார். கல்லூரி முதல்வர் உயர்திரு முனைவர் கி. குமார் அவர்கள் தன்னுடைய தலைமை உரையில் மாணவர்கள் இக்கல்லூரியில் நடத்தப் பெறும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளைச் சரியாக பயன்படுத்தி பருவத் தேர்விலும் போட்டித் தேர்விலும் வெற்றி பெற வேண்டும். இன்றைய பார்வையாளர்கள் ஆகிய நீங்கள் நாளை சிறப்பு விருந்தினர்களாக வருகை தர வேண்டும் அதற்கு இக்கல்லூரி என்றும் துணை நிற்கும் எனக் கூறினார். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் இளவரசு அவர்கள் முன்னிலை வகித்தார். மாணவர்களுக்கு சிறந்த நூலகப் பயன்பாட்டாளர் விருது வழங்கி சிறப்பித்தார் கல்லூரியின் செயலர் திருமிகு கா.ரகுநாதன் அவர்கள். மண்ணியல்ல் துறைத் த்தலைவர்

முனைவர் ஜவகர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் நூலகர் முனைவர் டி. சுரேஷ் குமார் வரவேற்புரையில் நூலகத்தில் உள்ள வாசிப்புக்கான வசதிகளைக் கூறினார் கலைப்புல முதன்மையர் முனைவர் ந. மாணிக்கம் அறிவியல், புல முதன்மையர் முனைவர் சுந்தர் மற்றும் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.